பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 10 | சனிக்கிழமை | 22.02.2025 | அதிர்வு 204

## இந்தியப் படகுகள் விரைவில் ஏலத்தில்



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் 06






### துப்பாக்கிச்சூடுகளால் அதிரும் தென்னிலங்கை

# கொட்டாஞ்சேனையில் வர்த்தகர் ஒருவர் கடைக்குள் வைத்து சுட்டுப் படுகொலை!

## மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற இரு சந்தேகநபர்கள் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை - கல்பொத்த பகுதியில் நேற்று இரவு ஒருவர் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டார்.

அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய மொன்றின் உரிமையாளரான சசிகுமார் (வயது 37) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

வர்த்தக நிலையத்துக்குள் வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது. 06

# சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரியின் காதலி சிக்கினார்



பாதாள உலகக் குழுக்களின் தலைவர்க ளில் ஒருவரான கனேமுல்ல சஞ்சீவவைக் கொழும்பு – புதுக்கடை நீதிவான் நீதிமன் றத்துக்குள் வைத்து சுட்டுப் படுகொலை செய்த துப்பாக்கிதாரியின் காதலி என்று கூறப்படும் ஒரு பெண்ணை மஹரகம பொலிஸார் கைது செய்து கொழும்பு குற்றப் பிரிவிடம் ஒப் படைத்துள்ளனர்.

இந்தப் பெண் பமுனுவவில் உள்ள ஒரு மசாஜ் நிலையத்தில் பணிபுரிபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கனேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்த பிறகு, துப்பாக்கிதாரி தனது காதலியுடன் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வந் தார் என்று விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

அதற்காக மேற்படி பெண்ணை நீர் கொழும்பு பகுதிக்கு அழைத்துச் செல்ல நபர் ஒருவர் மஹரகம பகுதிக்கு வந்துள்ளார். அவ ரையும் கைது செய்த பொலிஸார் கொழும்பு குற்றப் பிரிவிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்கு மாகாண தெற்குப் 06




உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிட்டு, தேர்தல் நடவ டிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் இப் போது சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு வந்துவிட்டது.

தேர்தலுக்கான அறிவிப்பை எப்போது தேர் தல் ஆணையம் வெளியிடும் என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஆயினும் எதிர்வரும் மே மாதம் இறுதிக்கு முன்னர் இந்தத் தேர்தல் நடந்து முடிந்து விடும் என விடயமறிந்த வட்டாரங்கள் உறுதி செய்கின்றன.


வடக்கு, கிழக்கில் இந்தத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கை ஓங்கி விடாது பார்ப் பதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முனைப்பாக இருக்கின்றன என்று தெரிகின்றது. அதற்காக அவை தமக்குள் ஒன்றித்து செயல்படுவது பற்றிய பூர்வாங்கப் பேச்சுக்களை இப்போது ஆரம்பித் திருக்கின்றன என்றும் அறிய வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் 06

# புதிய அரசமைப்பு குறித்து உரிய நேரத்தில் பேசுவோம்

## முன்னணிக்குத் தமிழரசு பதில் கடிதம்





இலங்கைத் தமிழரசுக் கட்சி

ILANKAI TAMIL ARASU KADCHI

ITAK HEAD OFFICE
16 (30) Martyn Road,
Jaffna, Sri Lanka

18.02.2025

கௌரவ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் பா.உ.
தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாக செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல்

மேற்படி விடயத் தலைப்பிலான எமது 27.01.2025 ஆம் திகதிய கடிதத்திற்கு மேலானது

இது தொடர்பான தங்களது 31.01.2025 ஆம் திகதிய கடிதம் எமது மத்திய செயற்குழுவின் 16.02.2025 ஆம் திகதிய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாலும் அதற்கான முன்வரைவு எதையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலுவுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அரசாங்கம் அதன் அரசமைப்பு உருவாக்க முன்மொழிவை துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சி.வி.கே.சிவஞானம்
தலைவர் (பதில்)
இ.த.அ.க

President (Acting) C.V.K.Sivagnanam | Office | General Secretary Dr.P.Sathiyalingam

(எஸ்.நிதர்ஷன்)

புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்புக்கு உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பதிலளித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று சந்தித்துக் கூட்டாகச் செயற்படுவதற்கான அழைப்புக் கடிதத்தை வழங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்த அழைப்புக்கான பதில் கடிதத்தைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம், முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் கலந்துரையாட விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதம் தொடர்பில் எமது மத்திய செயற்குழுவின் 16.02.2025 ஆம் திகதிய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாலும் அதற்கான முன்வரைவு எதையும் சமர்ப்பிக்காத நிலையிலும், நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலுவுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அரசு அதன் அரசமைப்பு உருவாக்க முன்மொழிவைத் துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்."
– என்றுள்ளது.

# நாடு முழுவதும் 25 லட்சம் தென்னங்கன்றுகள் பயிரிட திட்டம்

நாடளாவியரீதியில் 25 லட்சம் தென்னங்கன்றுகளைப்பயிரிடும்திட்டத்தைத்தெங்குஅபிவிருத்திஅதிகாரசபைஅறிமுகப்படுத்தியுள்ளதுதேங்காய்பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் ஆரம்ப நிகழ்ச்சி கடந்த 17 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது .

அதன்படி, வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் சுமார் ஒரு மில்லியன் தென்னங்கன்றுகளை நடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.



# இந்திய மீனவர்களின் அடாவடிக்கு எதிராக யாழில் 27 இல் போராட்டம்

## தீவகக் கடற்றொழில் அமைப்புக்கள் அழைப்பு




(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீன்பிடியாளர்களின் சட்டவிரோத இழுவைப் படகு தொழில் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். நகரில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தீவகக் கடற்றொழில் அமைப்புக் கள் தெரிவித்துள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேலும் கூறுகையில்,

"இந்திய மீனவரின் சட்டவிரோத இழுவைமடித் தொழில் நடவடிக்கையானது வடக்கில் குறிப்பாக எமது தீவக பிர தேசத்தைக் கடுமையாகப் பாதித்து வருகின்றது.

இதை நிறுத்துமாறு நாம் பல போராட்டங்கள், கோரிக்கை களை முன்வைத்தாலும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில்,எமது வாழ்வுரிமைக்கான பொருளாதார ஈட்டலை உறுதி செய்ய நாம் வீதியில் இறங்கி போராடத் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தீவகக் கடற்றொழில் அமைப்புக்க ளான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக் கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள் ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறும் எமது இந்தப் போரட்டம் யாழ். பண் ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் செல்லவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் வழங்கவுள் ளோம்.

எமது இந்தப் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பு வழங்கி போராட்டத்தை வலுவூட்டுமாறு அழைப்பு விடுகின்றோம்.

குறித்த போராட்டத்தில் தங்கள் பங்களிப்பை வழங்க 077 199 4097 அல்லது 077 563 4883 என்றை இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கோருகின் றோம்." – என்றனர்.

# யானைகள் ரயிலுடன் மோதுவதை தடுப்பதற்கு விசேட நடவடிக்கை



யானைகள் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாவதைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்தினால் விசேட நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, சரக்கு ரயில்களைப் பகல் நேரங்களில் இயக்குதல் மற்றும் ரயில்களுக்கான வேக எல்லைகளை விதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

கடந்த புதன் கிழமை இரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மீனகயா ரயிலில் மோதி 6 காட்டுயானைகள் உயிரிழந்தன.

இந்தநிலையில், இவ்வாறான விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# இன்றும் வெப்பமான வானிலை தொடரும்




நாட்டின் பல பகுதிகளில் இன்றும் வெப்பமான வானிலை எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் இன்று வெப்பமான வானிலை அதிகரிக்கக்கூடும்.

நிலவும் வெப்பமான காலநிலையினால் பணியிடங்களில் உள்ளவர்கள் அதிகளவான நீரைப் பருக வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வீட்டில் தங்கியிருக்கும் முதியவர்கள் மற்றும் நோயாளிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர்.

# கொழும்பு துறைமுக மேற்கு முனையத்தின் செயற்பாடுகள் அடுத்த வாரம் ஆரம்பம்



கொழும்பு துறைமுக மேற்கு முனையத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் 26 ஆம் திகதியளவில் ஆரம்பிக்கவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த முனையத்திற்கு கொள்கலன்களை ஏற்றிய கப்பலொன்று வருகை தரவுள்ளதாக பிரதியமைச்சர் ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனத்தினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்கு முனையத்தினூடாக வருடாந்தம் 2 தசம் 7 மில்லியன் கொள்கலன்களை இயக்க முடியுமென பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபையின் நிதியை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு முனையத்தின் வருடாந்த நடவடிக்கை கொள்ளளவு 3 மில்லியனாகும்.

# "வனமெல்லாம் புதிர்" நூல் அறிமுக நிகழ்வு கிளிநொச்சியில் நாளை

சிறந்த அறிவியல் புனைகதை இலக்கியத்துக்காக 2024 ஆம் ஆண்டு சாஹித்திய மண்டல விருதைப் பெற்ற, ஜனகா நீக்கிலாஸின் "வனமெல்லாம் புதிர்" நூலின் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக் கிளையினது தலைவர் அருணாசலம் சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக் கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்.எஸ். சிவலிங்கராஜா, படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச்செல்வி – சந்திரகலா ஆகியோர் உரையாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையிடமிருந்து பாடம் கற்கும் மாலைதீவு; வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியிலிருந்து மாலைதீவை மீட்டெடுக்க இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக்கொண்டிருப்பதாக மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே இதனை கூறியுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றி தொடர்பில் மாலைதீவு குடியரசின் வாழ்த்துக்களைத் தெரிவித்த வெளியுறவு அமைச்சர் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவின் பின்னர் வலுவான நாடாக எழுச்சியடைந்து வருவது தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும் இதன் மூலம் மாலைதீவை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக்கொண்டிருப்பதாகவும் அப்துல்லா கலீல் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாலைதீவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சர் இதன் போது ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் மாலைதீவு ஆற்றிவரும் மகத்தான பங்களிப்பிற்கு ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டு தெரிவித்துள்ளார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் ஆகியோரை தனித்தனியாகச் சென்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி இருக்கிறார்.

தற்போது வரவு – செலவுத் திட்ட விவாதத்திற்காக கொழும்பில் தங்கி நிற்கும் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகமும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை நாளை ஞாயிற்றுக்கிழமை சி.வி.கே.சிவஞானம் மன்னாரில் சந்திப்பார் எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி தனது அங்கத்துவக் கட்சிகளையும் பிற தரப்புகளையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இணுவிலில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் ஜொலி மண்டபத்தில் இதே விடயத்துக்காகச் சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றது.

இந்தச் சந்திப்புக்கு ஐங்கரநேசன், சாவகச்சேரியை சேர்ந்த அருந்தவபாலன், நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியினர் போன்ற தரப்புகள் எல்லாம் அழைக்கப்பட்டு இருக்கின்றன என்றும் தெரிகின்றது.

இந்த முறை உள்ளூராட்சி தேர்தலுக்கான ஏற்பாடுகளில் அனந்தி சசிதரன் தரப்பினர் பங்கு கொள்ள மாட்டார்கள் என்றும் கூறப்பட்டது. அவர் வரும் நாட்களில் ஜெனிவா செல்கின்றார். மார்ச் இறுதியிலேயே அவர் நாடு திரும்புவார் என்று கூறப்பட்டது. அதனால் உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகளின் போது அவர் நாட்டில் நிற்க மாட்டார் என்று கருதப்படுகின்றது.

எது, எப்படியாயினும் உள்ளூராட்சித் தேர்தல், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் வட்டார ரீதியில் 60 வீதத்திலும், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தில் 40 வீதத்திலும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைமையில் அமையப் போகின்றது. இந்த இரண்டு இலக்கிலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் கலப்பு தந்திரோபாய முறையொன்றை தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் ஏற்படுத்தத் தவறினால் பல உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பை தமிழ்த் தேசியத் தரப்புகள் இழந்து விடும் என்பதுதான் இப்போதைய யதார்த்தப் புறநிலையாகும். தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் பலரும் இந்தக் கட்டாய நிலைமையைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்று அவர்களில் பலரோடும் பேசியதில் எனக்குத் தோன்றியது.

## சஞ்சீவ கொலையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) கயங்க மாரப்பனவின் அறிவுறுத்தலின் பேரில் இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஏறாவூரில் மோட்டார் சைக்கிளில் முந்திச் சென்ற

# வர்த்தகரைத் தாக்கிய இரு பொலிஸார் பணியிலிருந்து உடன் இடைநிறுத்தம்

(கனகராசா சரவணன்)



ஏறாவூரில் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை முந்திச் சென்ற வர்த்தகரைத் தாக்கிய இரு பொலிஸார் உடனடியாகப் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏறாவூர் மைலம்பாவெளி பகுதி பிரதான வீதியில் மதுபோதையில் சிவில் உடையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பிரயாணித்த இரு பொலிஸார், தமது மோட்டார் சைக்கிளை முந்திச் சென்ற வர்த்தகர் ஒருவரை நிறுத்தி, அவர் மீது தலைக்கவசத்தால் தாக்குதல் நடாத்தியதில் அவர் படுகாய மடைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. தாக்குதலை மேற்கொண்ட இரு பொலிஸாரும் அங்கிருந்து தப்பி ஓடிய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இரு பொலிசாரையும் உடனடியாக நேற்று முன்தினமான வியாழக்கிழமை பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

## இந்தியப் படகுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகள் விரைவில் ஏலத்துக்கு வரவுள்ளன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் 2018 ஆம் ஆண்டு வரை எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகள் 2020 ஆம் ஆண்டு ஏலத்துக்கு விடப்பட்டு அவை இரும்புகளாக்கப்பட்டு பழைய இரும்புகளுக்காக ஏற்றுமதி செய்யக் காத்திருக்கின்றன.

தற்போது 2024 ஆம் ஆண்டு வரை இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றங்களால் அரசுடமையாக்கப்பட்ட இந்தியப் படகுகளே விரைவில் ஏலத்துக்கு வரவுள்ளன.

2024ஆம் ஆண்டு வரையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகளில் அதிகமானவை யாழ்ப்பாணம் – மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்பதனால் துறைமுகத்தில் உள்ளூர் மீனவர்கள அதிக சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே, அங்கே தரித்து நிற்கும் இந்தியப் படகுகளை அப்புறப்படுத்துக்கள் என்று உள்ளூர் மீனவ அமைப்புக்களால் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் உடனடியாக அரசுடமையாக்கப்பட்ட இந்தியப் படகுகளை ஏலத்தில் விடுவதற்கான முனைப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஏல நடவடிக்கைக்காக இதுவரை அரசுடமையாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள 57 படகுகளும், கிளிநொச்சி மற்றும் மன்னாரில் தலா 5 படகுகளும் என மொத்தம் 67 படகுகளின் விவரங்களையும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மாவட்ட அலுவலகங்களில் இருந்து கோரிப் பெற்றுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் ஏலம் விடப்படவுள்ள 57 படகுகளில்

10ஆம் இலக்க இராமேஸ்வரம் படகுகள் 23, 11 ஆம் இலக்க மண்டபம் பகுதி படகுகள் இரண்டு, 8 ஆம் இலக்க புதுக்கோட்டை மாவட்ட படகுகள் 14, 16ஆம் இலக்க கன்னியாகுமாரிப் படகுகள் 8 உடன் 6 ஆம் இலக்க நாகபட்டினப் படகுகள் 3, அதேபோன்று பாண்டிச்சேரிப் படகுகள் இரண்டும் 5 நாட்டுப் படகுகளும், இலக்கம் இல்லாத ஓர் படகுடன் 9 ஆம் இலக்க கீழக்கரையைச் சேர்ந்த ஒரு படகும் காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 5 படகுகளில் 4 படகுகள் இராமேஸ்வரம் பகுதியையும், ஒரு படகு மண்டபம் பகுதியையும் சேர்ந்தவை என்பதோடு

மன்னாரில் உள்ள 5 படகுகளுமாகவே தற்போது 67 படகுகள் ஏலத்தில் விட நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

2020ஆம் ஆண்டு இலங்கையில் இந்திய படகுகள் ஏலத்தில் விடப்பட்டதன் பின்னர் தற்போது இரண்டாவது தடவையாக முயற்சிகள் இடம்பெறுகின்றன.

## கொட்டாஞ்சேனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி நபர் தலவாக்கலை, பேவல் தோட்டத்தைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.

ரி – 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவரும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும் துப்பாக்கி சகிதம் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற வேளை ஒருகொடவத்தையில் வைத்து கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனை மற்றும் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்னிலங்கையில் கடந்த 4 நாட்களில் நான்கு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் சீரடி சாயி பாபாவின் மகிமை பற்றி உரை

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற ஆன்மீக சொற்பொழிவாளர் திருமதி வாசுகி மனோகரன் கடந்த வியாழக்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் சீரடி சாயி பாபாவின் மகிமை பற்றி உரையாற்றினார்.

இதன்போது, சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகத்தின் சார்பில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் சொற்பொழிவாளர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில், பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி மற்றும் அறங்காவலர்களான கோபால் ஜீவரட்ணம், சர்வகுணதேவி சண்முகநாதன் ஆகியோரும் பங்கேற்றனர்.

(படப்பிடிப்பு:- எம். எஸ். சலீம்)











# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முகவரி வழங்கும் வேலைத்திட்டம்



பெருந்தோட்ட தொழிலாளர்கள் அனைவருக்கும் பிரத்தியேக முகவரிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு அமைவாக இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

தற்போது பெருந்தோட்டங்களில் 260,000 மேற்பட்ட தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக தபால் திணைக்களத்துடன் கலந்துரையாடி அவர்களுக்கான பிரத்தியேக முகவரிகளை தயாரித்து முடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரத்தியேக முகவரி இன்மையினால் வங்கி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு சுட்டிக்காட்டியது.

பெருந்தோட்ட மக்களுக்கும் ஏனைய மக்களை போன்று அடையாளம் உள்ளதென அமைச்சின் செயலாளர் வலியுறுத்தினார்.

அதனை பாதுகாக்கும் வகையிலேயே அவர்களுக்கான முகவரிகளை வழங்கி சமூகத்தில் அவர்களை மேம்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ட்ரம்பின் போக்கிலித்தனம்

அமெரிக்காவில் டொனால்ட் டிரம்பின் ஜனாதிபதி தேர்வு உலக நாடுகள் பலவற்றின் அரசியல், இராணுவ இருப்பியலை - சமநிலையை - புரட்டிப் போடும் திசையை நோக்கி நெட்டித் தள்ளி இருப்பதாகத் தெரிகிறது.

ரஷ்யாவையும் உள்ளடக்கிய சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்கா, கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1949 இல் செய்து கொண்ட வட அட்லாண்டிக் ஒப்பந்த கட்டமைப்பு - நேட்டோ - இப்போது டிரம்பின் குளறுபடியான அணுகுமுறையால் சீர்குலைந்து போகும் நிலையை நோக்கி நகரத் தொடங்கி இருக்கின்றது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளும் கனடாவும் தங்கள் பாதுகாப்புக்கு அமெரிக்காவை விட்டு தங்களுக்குள் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் ஐரோப்பிய இராணுவக் கட்டமைப்பு ஒன்றைத் தனித்து உருவாக்குவது குறித்துத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் ஒரு லட்சம் அமெரிக்கத் துருப்புகள் நிலை கொண்டுள்ளன. ஜேர்மனியில் மட்டும் 35 ஆயிரம் அமெரிக்க துருப்புகள் இருக்கின்றன என ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

ரஷ்ய அத்துமீறல் அச்சுறுத்தல்களுக்கு எதிரான இந்த இராணுவ நிலைகளை இப்போது திடீரெனக் கைவாங்கும் திட்டத்துடனான அதிரடி நகர்வுகளுக்கு டிரம்பின் நிர்வாகம் கோடி கட்டி வருவதாகத் தெரிகிறது.

“ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கத் துருப்புக்கள் எந்தக் காலமும் இருக்கும் என்று நம்பாதீர்கள்!” என டிரம்ப் நிர்வாகத்தின் பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் கடந்த வாரம் வார்ஸோவில் கூறி இருக்கின்றமை அமெரிக்காவின் எதிர்காலத் திட்டங்களைக் கோடி கட்டுவதாக ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளில் இணையும் ஏற்பாட்டுக்கு இணங்கியமையினால்தான் ரஷ்யாவோடு முரண்பட்டு யுத்தம் புரிய வேண்டிய நிலைமை உக்கிரைனுக்கு ஏற்பட்டது. அந்த யுத்தத்தில் இதுவரை காலமும் உக்கிரைனுக்குப் பக்கபலமாக நின்று வந்த அமெரிக்கா, இப்போது டிரம்பின் ஆட்சி வருகையோடு உக்கரையினை அடியோடு கைவிட்டு, தனது பாரம்பரிய பரம வைரியான ரஷ்யாவோடு கைகோர்க்கும் சமிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றது.

அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் எடுத்திருக்கும் கால்வாரும் போக்கிலித்தனத்தை நன்கு உணர்ந்து கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகள், இனிமேல் தங்களுக்குள் ஒன்றிணைந்து, சொந்த காலில் எழுந்து நிற்பது பற்றி தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கி இருக்கின்றன.

அமெரிக்காவின் இந்த திடீர் கால்வாரல் ஐரோப்பிய நாடுகளும் நேட்டோ பங்காளிகளும் எதிர்பாராத திருப்பம் ஆகும். அளவுக்கு அதிகமாக அமெரிக்காவை நம்பி அதனோடு சகவாசம் வைத்த ஐரோப்பிய நாடுகள் இப்போது உக்கிரைனைப் போல நட்டாற்றில் விடப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளைத் திடீரென பாதுகாப்பு விடயத்தில் நட்டாற்றில் அந்தரிக்க விட்ட அமெரிக்கா குறித்து அந்த நாடுகள் அதிகம் சிந்திக்கின்றன. இதுவரை காலமும் அமெரிக்காவை நம்பி அதனோடு சேர்ந்து பயணித்ததன் முட்டாள்தனத்தை அந்நாடுகள் இப்போது எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டிருக்கின்றன.

இதன் விளைவுகளை எதிர்காலத்தில் அமெரிக்கா அந்த நாடுகளில் இருந்து படிக்க வேண்டி வரும் என்றே தோன்றுகின்றது.

### காற்றாலை, கனிய மணல் அகழ்வு, கரையோர மண் அகழ்வு

# மன்னார்த் தீவில் இயற்கை வளத்தைச் சுரண்டும் 3 திட்டங்களுக்குமே முற்றுப்புள்ளி வையுங்கள்!

**மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்.**

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்த நாட்டில் ஜனநாயகப் போராட்டம் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு ஏற்பட்டது. மக்கள் சக்தி வலிமையானது. எனவே மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை, கனிய மணல் அகழ்வு, (டைட்டானியம்) கரையோர மண் அகழ்வு ஆகிய மூன்று திட்டங்களையும் முழுமையாக நிறுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

ஆகவே எமது கோரிக்கையை புரிந்து கொண்டு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் ஜனாதிபதிக்கு நேற்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

மன்னார் தீவு பகுதியின் எதிர்காலம் மனிதர்கள் வசிப்பது கேள்விக்குள்ளாகப் போகிறது. ஆரோக்கியமான சுற்றுச் சூழலில் மனிதர்கள் வசிக்க முடியாத சூழ்நிலையில் அபி விருத்தி எதற்காக? இந்த உலகத்தில் இயற்கைக்கு அப்பால் மனிதர்களாலேயே யாவும் மனிதர்களுக்காக உருவாக் கப்பட்டது.

அது மனிதர்களுக்கு எதிராக மாறுமாக இருந்தால் அது பயனற்றது. இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கை வளச் சுரண்டல் மனிதர்களின் வாழ்வியல் இருப்பை ஏற்புடையதாக்காது. மன்னார் தீவு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது தரைத் தோற்றத்தை விட மிக வும் தாழ்வானது. இயற்கை அனர்த்தத்தை தாங்கும் திறன் கொண்டதாக அதன் கட்டமைப்பு இல்லை என துறை சார்ந்த ஆய்வியலாளர்களின் கருத்தாக உள்ளது.

அதனால்தான் மன்னாரில் மூன்று மாடிக்கு மேல் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை.

எனவே தீவுப் பகுதியில் காற்றாலை, கனிய மணல் அகழ்வு, (டைட்டானியம்), கரையோர மண் அகழ்வு ஆகிய மூன்று திட்டங்களையும் முழுமையாக நிறுத்த வேண்டுமென பொது மக்களின் சார்பில் சிவில் அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

இவை செயல்படுத்தப்பட்டால் மன்னார் தீவுப் பகுதி யில் வசிக்க முடியாத நிலைமை எதிர்காலத்தில் ஏற்படும். மழை விட்டு ஒரு மாதம் கடந்தும் மழை நீர் ஓட முடியா மல் தேங்கி நிற்கிறது. அதனால் சிறு, குறு, குடிசைக் கைத் தொழில் யாவும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளமையுடன் விவசாயமும் அழிவடைந்துள்ளன. பிரதான தொழிலாகிய மீன்பிடியும் பாதிக்கப்படுகிறது.

விஞ்ஞான ரீதியான அறிக்கைகள் என்பவௌ மனி தன் உயிரிழக்கும் வரை காரண, காரியம், தொழில்நுட்ப ரீதியாக படித்தவர்கள் என கூறுபவர்கள் கூறிக்கொண்டே இருப்பார்கள்.




மிகச் சிறந்த உதாரணம் வலுக்கட்டாயமாக போடப்பட்ட கொரோனா ஊசியை தயாரித்த கம்பெனிகளே பக்க விளை வுகள் இருப்பதாக கூறுகின்றன.

அந்த விளைவுக்கு யார் பொறுப்பு ஏற்பது? உலகில் இயற்கையை மதிப்பீடு செய்ய எவராலும் முடியாது. அப்படி இருந்தால் இந்த உலகத்தில் இயற்கை அனர்த்தமே உருவா காது.

படித்தவர்கள் என்று கூறப்படுபவர்களின் தவறான முகா மைத்துவத்தினால் தான் இந்த நாடே திவாலானது. எமது கோரிக்கையை மனித வாழ்வியலின் உணர்வுத் திறனாக பார்க்க வேண்டும். ஆனால் வழக்கமான வடகிழக்கு - தெற்கு இனவாத ரீதியான அடக்குமுறை செயற்பாடாகவே அரசு இதனையும் அணுகுகின்றது. எமது ஜனநாயக குரலுக்கு செவி மடுப்பதாக இல்லை.


துறை சார்ந்த திணைக்களங்கள் எம்மை எதிரிகளாகவும் துரோகிகளாகவும் அணுகுகின்றன.

எந்தத் திட்டமும் மக்கள் விருப்பமின்றி செயல்படுத்த முடியாது. அவ்வாறு செயல்படுத்த முனைவது ஜனநாயக விரோதமாகும். நாம் காற்றாலைக்கு எதிரானவர்கள் அல்லர்.

மன்னார் தீவுக்கு வெளியே மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படாத இடத்தில் காற்றாலை அமைக்கலாம். தாங்கள் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மன்னார் காற்றாலை திட்டத்தை உடனடி யாக நிறுத்துவோம் என வாக்குறுதி வழங்கினீர்கள். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? ஆகவே எமது கோரிக்கை மறுக்கப்பட்டால் மன்னார் தீவுக்குள் மூன்று திட்டத்தையும் செயல்படுத்த மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். தொடர்ந்து ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இந்த நாட்டில் ஜனநாயகப் போராட்டம் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பே ஏற்பட்டது. மக்கள் சக்தி வலிமையானது. ஆகவே எமது கோரிக்கையை புரிந்து கொள்வீர்கள் என நம்புகின் றோம். - என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரமிட் திட்ட மோசடி சந்தேகநபர் மார்ச் 7 வரை விளக்கமறியலில்



ONMAX DT எனப்படும் பிரமிட் திட்ட நிதி மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை அடுத்த மாதம் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சர்வதேச பொலிஸாரினால் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக் கப்பட்டிருந்த நிலையில் துபாயில் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட பிரதான சந்தேகநபர் நேற்று பிற்பகல் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டார்.

ONMAX DT எனப்படும் தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான இணையத்தளத்தை உருவாக்கி சந்தேக நபர் பாரியளவிலான நிதியை கையகப்படுத்தியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் இதன் போது நீதிமன்றில் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சந்தேகநபர் இதனூடாக எவ்வித இலா பத்தையும் ஈட்டவில்லை என பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் உயிர் அச்சுறுத்தலால் வெளிநாட்டில் இருந் துள்ளார் எனவும் அவர் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளார் என்றும் சட்டத்தரணி நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த பிரதம நீதவான் பிணை கோரிக் கையை நிராகரித்து சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத் தரவையும் பிறப்பித்துள்ளார்.

# பாதீட்டுக்குப் பிறகு தமிழரின் இன்றைய நிலை



Dr.முரளி வல்லிபுரநாதன்

**இதுவரை இருந்த அரசுகளைக் காட்டிலும் ஆபத்தான வகையில் தமிழ் மக்களுடன் "இறங்கிப் பழகும்" தந்திரோபாயத்தினைக் கையிலெடுத்துப் பேரினவாத வழிவரைபடத்தினை இற்றைப்படுத்த முற்படும் இந்த அரசு குறித்துத் தமிழர்கள் அனைவரும் விழிப்படைய வேண்டிய கடைசித் தருணம் இது.**

**இல்லையேல் மாகாண சபைகளையும் பிரதேச சபைகளையும் ஆளும் தரப்பிடம் இழந்து, கட்டியுள்ள கோவணத்தையும் பறிகொடுத்த சுடலையாண்டிகளாக ஈழத் தமிழர்கள் தவிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.**

இடதுசாரிகளாகத் தம்மைக் காட்டிக்கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது முதலாவது பாதீட்டை வெற்றிகரமாக சமர்ப்பித்து இருக்கிறது. கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஊழலுக்கு எதிராக ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று முதலில் ஜனாதிபதி அனுரவுக்கும் பின்னர் தேசிய மக்கள் சக்திக்கும் வாக்களித்தவர்களில் நானும் ஒருவன்.

ஆனால் இதுவரை நிகழ்ந்த மாற்றங்களை எடுத்துக் கவனமாக ஆராய்ந்தால் சிறுபான்மையினர் அதிலும் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பது தெளிவாகப் புலனாகிறது.

பாதீட்டை மேலெழுந்தவாரியாக பார்த்தால் வடக்கின் அபிவிருத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாக தோன்றும். அதேவேளை கடந்த காலத்தில் பேரினவாத அரசாங்கங்கள் செய்த இராணுவமயமாக்கல் திட்டங்களுக்கு இம்முறையும் எந்த விதத்திலும் சளைக்காமல், வழமை போல் அரச ஊழியரின் சம்பளத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 48 வீதமானது பாதுகாப்புப் படையினரின் சம்பளத்துக்கே ஒதுக்கப்பட்டு உள்ளது.

உலகில் பொது மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அதிகளவு இராணுவ மற்றும் பாதுகாப்பு படையினரை கொண்ட நாடாக இலங்கை தொடர்ந்தும் இருந்து வருகிறது (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது).

ஏற்கனவே தையிட்டி முதலான தமிழரிடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் எதையும் விடுவிக்கமாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவிரித்து விட்டது (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது).

நேர்மையான அதிகாரி என்று பெயர் பெற்ற ஆளுநர், "பிறந்து வளர்ந்த இடங்களைக் கைவிட்டு மாற்று நிலங்களை பெற்றுக் கொள்ளுங்கள்" என்று மனச்சாட்சியை அடைவு வைத்துவிட்டு ஆலோசனை வழங்குகிறார்.

இதேவேளை பிரதமர் ஹறிணியும் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய அரசியல்வாதிகளும் வழமையான அரசியல்வாதிகள் போல் படம் காட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் பல பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூட வசதிகள் கூட சரியான முறையில் காணப்படவில்லை. இதன் காரணமாகப் பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் பாடசாலைகளில் மலசலகூடங்களை உபயோகிக்காது தமது இயற்கைத் தேவைகளை கட்டுப்படுத்துவதால் சிறுநீர் தொற்றுக்கு உள்ளாகின்றனர்.




மறுபுறம் பல பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் மிகவும் கேவலமான நிலையில் உள்ளன. குறிப்பாகத் தென்பகுதியில் தொழில்நுட்ப பிரிவுகள் உள்ள பாடசாலைகளில் உள்ள ஆய்வு கூடங்களுடன் ஒப்பிட்டால் வட பகுதிப் பாடசாலைகளின் நிலை எவ்வளவு பின்தங்கி உள்ளது என்ற உண்மை புலப்படும். உண்மை இவ்வாறு இருக்கப் புலம்பெயர் தமிழர்களின் பெரும் நிதி உதவியுடன் நிறைவான வளங்களுடன் இயங்கும் முன்னணிப் பாடசாலையான யாழ் இந்துக் கல்லூரிக்குத் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் குழுவுடன் சென்று படம் காட்டும் கல்வி அமைச்சர் உண்மையாக எந்தக் குறைகளை நிவர்த்தி செய்து இருப்பார்?

அடுத்ததாக யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிறுவர்களுடனும் நோயாளிகளுடனும் உரையாடி அவர்களது குறைகளை அறிபவராகொ படம் காட்டுகிறார்.

நூற்றுக்கணக்கான இருதய நோயாளிகள் மாரடைப்பால் ஏற்படும் உயிரிழப்பு அபாயத்தை எதிர்நோக்கி வட மாகாணத்தில் காத்திருக்கின்றனர். பல சத்திர சிகிச்சை கூடங்கள் யாழ் வைத்தியசாலையில் காணப்பட்ட போதிலும் மாபியாக் கும்பல் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய ஒரு நோயாளி ஆகக் குறைந்தது இரண்டரை வருடங்கள் காத்திருக்க வேண்டும் கூறுகிறது. இதன் காரணமாக உயிர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள் தனியார் துறையில் மாபியாக்களுக்கு 20 இலட்சம் ரூபா அளவில் செலவழித்து பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். 20 இலட்சம் ரூபா சேர்க்கமுடியாத பல ஏழைகள் இந்த 2 இரண்டரை வருட காலத்தில் மாரடைப்பினால் நாள் தோறும் இறந்து கொண்டிருக்கிறார்கள். உயிர்காக்கும் அடிப்படை நுண்ணுயிர் கொல்லி ஜயவெடிைழைவஉளஸ மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இல்லாத நிலை. புற்றுநோயாளர்களுக்கான மருந்துகள் அனேகமானவை அரச வைத்தியசாலைகளில் இல்லை. வெளிச் சந்தையில் அவற்றின் விலை கோடீஸ்வரர்களாலும் செலுத்த முடியாத அளவு அதிகம். இதனால் பல்லாயிரக்கணக்கான ஏழை நோயாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த ஏழைகளுக்கு விரைவாகச் சிகிச்சை செய்யப் பிரதமர் உதவி இருந்தால் அவர்கள் கை கூப்பி அம்மையாரைத் தொழுது இருப்பார்கள். ஆனால் இது ஒன்றும் தெரியாத மாதிரி சிறு பிள்ளைகளுடனும் உயிர் ஆபத்

தொடர்ச்சி▼

# பாதீட்டுக்குப் பிறகு தமிழரின் இன்றைய நிலை


தொடர்ச்சி▲

தற்ற ஏனைய நோயாளிகளுடனும் உரையாடி அம்மையார் எதை சாதிக்க நினைக்கிறார்?

வட்டுவாகல் பாலத்துக்கும் ஏனைய சாலை அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கியமைக்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நன்றி தெரிவித்துப் பேசும்போது ஏனைய தமிழ் உறுப்பினர்கள் கரகோஷம் செய்கிறார்கள். நெடுஞ்சாலை அபிவிருத்தி என்பது குடியேற்றத் திட்டத்தின் ஓர் உபாயம் என்ற சூழ்ச்சியை அறிய முடியாதவர்களாக இருக்கிறார்கள் தமிழர் பிரதிநிதிகள். அபிவிருத்தி என்ற போர்வையில் யாழ்நூலகம் புனர்நிர்மாணிக்கப்பட்டு கடந்த கால வரலாறு பூசிமெழுகப்பட்டுவிட்டது. காரணம் நூலகத்தின் ஒரு பகுதியையாவது புதுப்பிக்காமல் வரலாற்று ஆவணமாகப் பாதுகாக்கும் எண்ணம் எவருக்கும் இருக்கவில்லை. இதுதான் வட்டுவாகல் பாலத்துக்கும் நிகழப்போகிறது.

மேலும், கடந்த கால நெடுஞ்சாலை அபிவிருத்தியின் பின்னர் மறவன்புலவு முதல் வவுனியா வரை தமிழர்களின் பூர்விக நிலங்கள் மாற்றினத்தவர்களுக்கு கை மாறிக்கொண்டு இருக்கிறது. ஒரு காலத்தில் “யாழ்ப்பாணத்தானுக்குக் காணி விற்க மாட்டோம்“ என்று பிரதேசவாதம் பேசிய வன்னி மண்ணின் மைந்தர்களும் கிழக்கில் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய குற்றவாளிகளை ஆதரித்த கிழக்கு மைந்தர்களும் மாற்றினத்தவர்களுக்கு எந்தவித நாணமும் இல்லாமல் காணிகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மிகவும் திட்டமிட்ட வகையில் வரையப்பட்ட வழிவரைபடத்தினை ஐசுழயன அயிஸ மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் சகல அரசுகளும் முன்னெடுத்து வந்துள்ளன. இரண்டு அவத்தைகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதல் அவத்தையானது [phase 1] வடக்குக் கிழக்கு மரபுவழித் தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையான நிலத்தொடர்பினை மதுரு ஓயா, யான் ஓயா மற்றும் மல்வத்த ஓயா ஆகிய ஆற்றுப்படுக்கைகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தித் துண்டாடுதல் ஆகும். இதன் விளைவாக வடமாகாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகியன தமது மரபு வழி நிலத்தொடர்பை இழக்கும். இரண்டாவது அவத்தையில் ஜீயளந 2ஸ குறிப்பிட்ட சிங்களக் குடியேற்றங்களால் மாற்றமடையும் இனப்பரம்பலைப் பயன்படுத்தி மாகாண எல்லைகளை மீள் நிர்ணயம் செய்தல் ஆகும். மகாவலி அமைச்சின் மேலதிகப் பொது முகாமையாளராக 80 களில் கடமையாற்றிய வரும் இந்த இரகசிய வழிவரைபடத்தினை முதன் முதலாக ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரின் ஆசியுடன் நடைமுறைப்படுத்தியவருமான மாலிங்க ஹேமன் குணரத்தினவின் நூலான “ஒரு இறையாண்மை அரசுக்கு“ [for a sovereign state] என்ற நூலில் இந்தத் திட்டம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.




இதே வழிவரைபடத்திற்கு அமைவாகப் புதிய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் மாறாது தொடரும் குடித்தொகை மாற்றங்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கையையும் மாநில சுயாட்சி கோரிக்கையையும் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்கச் செய்து வருகின்றன. குறிப்பாக, இடதுசாரிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இந்த அரசானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவான தொகையான 43 பில்லியன் ரூபாக்களையே சமூக நலனோன்பிற்காக [social welfare] செலவிட உத்தேசித்துள்ள அதேவேளை, பாதுகாப்புத் துறைக்காக வழக்கம் போலவே 442 பில்லியன் ரூபாக்களைச் செலவிட உத்தேசித்துள்ளது.

இந்த உண்மையைக் கூட உணர முடியாமல் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் தமிழ் தேசியவாதிகள் ஒருபுறம். ஏற்கனவே அரசியல் யாப்பு மாற்றத்தை கிடப்பில் போட்டுள்ள தேசிய மக்கள் அரசாங்கம் பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமையையும் பேணிவரும் நிலையிலும் இன்னமும் அவர்கள் மூலமாக தமிழர்கள் சம உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மனப்பால் குடிக்கும் தமிழ் இளைஞர்கள் ஒருபுறம். புலிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் வந்து மீண்டும் தமிழர்களின் உரிமையை பெற்றுத் தருவார்கள் என்று இன்னமும் நம்பும் கனவுலகவாசிகள் சிலர். இவர்களது மாயையைப் பயன்படுத்திப் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் கவசத்தினுள் ஒழிந்திருந்து இனத்தின் மானத்தினைக் கப்பலேற்றும் கோமாளிகள் இன்னொருபுறம்.

எனவே, இதுவரை இருந்த அரசுகளைக் காட்டிலும் ஆபத்தான வகையில் தமிழ் மக்களுடன் “இறங்கிப் பழகும்“ தந்திரோபாயத்தினைக் கையிலெடுத்துப் பேரினவாத வழிவரைபடத்தினை இற்றைப்படுத்த முற்படும் இந்த அரசு குறித்துத் தமிழர்கள் அனைவரும் விழிப்படைய வேண்டிய கடைசித் தருணம் இது.

இல்லையேல் மாகாண சபைகளையும் பிரதேச சபைகளையும் ஆளும் தரப்பிடம் இழந்து, கட்டியுள்ள கோவணத்தையும் பறிகொடுத்த சுடலையாண்டிகளாக ஈழத் தமிழர்கள் தவிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

## உலக சாரணர் ஸ்தாபகர் தினம் இன்று

# அசாத்தியத்தை சாத்தியமாக்குபவனே சாரணன்!

## உலகின் மிகப்பெரிய இளைஞர் இயக்கம்

"ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 22 அன்று, உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான சாரணர்கள் உலக சாரணர் ஸ்தாபகர் தினத்தை கொண்டாடுகிறார்கள், இது உலகளாவிய சாரணர் இயக்கத்தின் பின்னால் உள்ள தொலைநோக்கு பார்வையாளரான Robert Baden-Powell பிறந்த நாளை கௌரவிக்கிறது. தனிமனித வளர்ச்சி, தலைமைத்துவம், சேவை மற்றும் வெளிப்புற சாகசத்தின் கொள்கைகள் மூலம் இளம் சமுதாயத்தினை வடிவமைப்பதில் அவரது குறிப்பிடத்தக்க சேவைக்காக இந்த நாள் அஞ்சலியாக செலுத்தப்படுகின்றது.

சாரணர் இயக்கத்தின் உலக அமைப்பின் (WOSM) ஒரு பகுதியாக, 172 நாடுகளில் 57 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட சாரணர் உலகின் மிகப்பெரிய இளைஞர் இயக்கங்களில் ஒன்றாக உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்த இயக்கம் தனிநபர்கள் மற்றும் சமூகங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, ஒழுக்கம், குழுப்பணி மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் மதிப்புகளை அர்த்தப்படுத்தியுள்ளது."

### பேடன்-பவல் பிரபுவின் வாழ்க்கையும் மரபும்

பேடன்-பவல் பிரபு பெப்ரவரி 22, 1857 அன்று இங்கிலாந்தின் லண்டனில் பிறந்தார். அவரது ஆரம்ப கால வாழ்க்கை சாகசம், படைப்பாற்றல் மற்றும் ஆய்வுக்கான ஆர்வம் ஆகியவற்றால் நிரம்பியது. அவர் இங்கிலாந்து இராணுவத்தில் சேர்ந்து இந்தியா மற்றும் ஆபிரிக்காவில் பணியாற்றினார், அங்கு அவர் மதிப்புமிக்க அனுபவங்களைப் பெற்றார், அதன் பின்னர் சாரணர் இயக்கத்தை உருவாக்குவதில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

இரண்டாம் உலக போரின் போது (1899-1902), பேடன் - பவல் புதுமையான இராணுவ தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி தென்னாப்பிரிக்காவில் உள்ள மாஃபேகிங் (Mafeking) நகரத்தை வெற்றிகரமாக பாதுகாத்தார். சிறுவர்கள் செய்திகளை எடுத்துச் செல்வதன் மூலமும், பல்வேறு வழிகளில் உதவுவதன் மூலமும் போர் முயற்சிகளுக்கு எவ்வாறு பங்களிப்பு செய்கிறார்கள் என்பதை அவர் கவனித்தார். கவனிப்பு, உயிர்வாழ்வு, தலைமைத்துவம் மற்றும் குழுப்பணி போன்ற திறன்களில் சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்க இது அவருக்கு ஊக்கமளித்தது. அவரின் இந்த அவதானிப்பு சாரணர் இயக்கத்தின் உருவாக்கத்திற்கு வித்திடும் சிந்தனையாக மாற்றம் பெறும் என்பதனை அன்று எவரும் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

### சாரணர் இயக்கத்தின் பிறப்பு

1907 ஆம் ஆண்டில், பேடன்-பவல் இங்கிலாந்தின் பிரவுன்சீ தீவில் ( Brownsea Island) வெவ்வேறு சமூக பின்னணியைச் சேர்ந்த 20 சிறுவர்களுடன் முதல் சாரணர் முகாமை ஏற்பாடு செய்தார். இந்த முகாம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது மற்றும் சாரணர் இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தது. இதைத் தொடர்ந்து, அவர் 1908 இல் "சிறுவர்களுக்கான சாரணர்" என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதினார், இது இளைஞர் மேம்பாடு குறித்த மிகவும் பரவலாக படிக்கப்பட்ட கையேடுகளில் ஒன்றாக மாறியது. சாரணர் இயக்கமும் விரைவாக விரிவடைந்தது, 1920 ஆம் ஆண்டில், முதல் உலக சாரணர் ஜம்போரி



லண்டனில் நடைபெற்றது, அங்கு பேடன்-பவல் உலகின் தலைமை சாரணராக அறிவிக்கப்பட்டார்.

### ஸ்தாபகர் தினம் ஏன் கொண்டாடப்படுகிறது?

உலக சாரணர் நிறுவனர் தினம் பேடன்-பவலின் மரபை நினைவுகூறவும், சாரணரின் மதிப்புகளைப் பிரதிபலிக்கவும் அனுசரிக்கப்படுகிறது. சாரணர் மற்றும் சாரணர் தலைவர்கள் கடமை, பொறுப்பு மற்றும் சமூக சேவையை வலியுறுத்தும் சாரணர் வாக்குறுதி மற்றும் பிரமாணங்களை தங்கள் உறுதிப்பாட்டை புதுப்பிக்க வேண்டிய நாள் இதுவாகும்.

இந்த நாள் பேடன்-பவலை நினைவுகூருவது மட்டுமல்ல, பொறுப்புள்ள உலகளாவிய சமூக சிந்தனை கொண்ட முற்போக்கு தன்மையுடைய சமூகமாக அவரது பணியைத் தொடர்வதும் ஆகும். சாரணர் தன்னம்பிக்கை, சிக்கலைத் தீர்ப்பது, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் தலைமைத்துவம் போன்ற அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களைக் கற்பிக்கிறது, இது இளைஞர்களுக்கு சமூகத்திற்கு சாதகமாக பங்களிக்க உதவுகிறது. அத்தகைய திறன்கள் தொட்டில் வாழ்வியல் தொடக்கம் மயானம் வரையான தனிமனித வாழ்வியல் முழுவதுமாக செல்வாக்குச் செழுத்தும் விடயமாக காணப்படுகின்றது.

தொடர்ச்சி▼

# அசாத்தியத்தை சாத்தியமாக்குபவனே சாரணன்!

**தொடர்ச்சி▲**

### உலகெங்கிலும் ஸ்தாபகர் தினம் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?

உலகெங்கிலும் உள்ள சாரணர்களின் உணர்வை பிரதிபலிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நிறுவனர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடு கிறார்கள். அத்தகைய செயற்பாடுகளாக

### சமூக சேவை திட்டங்கள்

சாரணர்கள் போன்ற தன்னார்வ நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்

- தெருக்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்தல்.
- மரக்கன்றுகளை நடுதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்டங்கள்.
- மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் உதவுதல்.
- தேவைப்படுபவர்களுக்கு உணவு, உடைகள் மற்றும் பொருட்களை நன்கொடையாக வழங்குதல்.

முகாம்கள், பேரணிகள் மற்றும் அணிவகுப்புகள்

பல சாரணர் அமைப்புகள் முகாம்கள், நடைபய ணங்கள் மற்றும் சாரணர்கள் பங்கேற்கும் பேரணிகளை ஏற்பாடு செய்கின்றனர்

- அவர்களின் உயிர்வாழ்வு மற்றும் குழுவை உருவாக்கும் திறன்களை பரிசோதனைக்குட்படுத்தும் வெளிப்புற சவால்கள்.
- சிறப்பு நிறுவனர் தின அணிவகுப்புகள் மற்றும் கொடி விழாக்கள்.
- சாரணர் பாரம்பரியங்களைக் கொண்டாடும் கலாச்சார நிகழ்ச்சிகள்.

கல்வி மற்றும் தலைமைத்துவ திட்டங்கள்

சாரணர் மற்றும் சாரணர் தலைவர்கள் பட்டறைகள், அமர்வுகள் மற்றும் கண்காட்சிகளை முன்னி லைப்படுத்துகிறார்கள்

- உலகளவில் சாரணர் இயக்கத்தின் வரலாறு மற்றும் தாக்கம்.
- தலைமை மற்றும் பொறுப்பின் முக்கியத்துவம்.
- நவீன சமூகத்தில் சாரணரின் பங்கை விரிவுபடுத்துவதற்கான வழிகள்.

### சாரணர் வாக்குறுதியை புதுப்பித்தல்

இந்த நாளில், சாரணர்கள் தங்கள் சாரணர் வாக்குறுதியை புதுப்பிக்க ஒன்றிணைகிறார்கள், இது இயக்கத்தின் மதிப்புகளுக்கு அவர்களின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

### சாரணர் இயக்கத்தின் உலகளாவிய தாக்கம்?

சாரணர் இயக்கம் நிறுவப்பட்டதிலிருந்து, இளைஞர் மேம்பாட்டில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இது மில்லியன் கணக்கான இளைஞர்களை நெறிமுறை வாழ்க்கையை நடத்தவும், சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும், பல்வேறு கலாச்சாரங்களிடையே அமைதி மற்றும் புரிதலை ஊக்குவிக்கவும் ஊக்கு வித்துள்ளது.

சாரணர் இயக்கம் அரசியல், வணிகம் மற்றும் மனிதாபிமானப் பணிகள் உட்பட பல்வேறு துறைகளில் ஏராளமான தலைவர்களை உருவாக்கியுள்ளது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடி, விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் வணிக அதிபரான பில் கேட்ஸ் உட்பட பல வெற்றிகரமான நபர்கள் தங்கள் ஆரம்ப ஆண்டுகளில் சாரணர் இயக்கத்தில் ஈடுபட்டனர்.

சாரணர் இயக்கமும் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளும் (SDGs) சாரணர் ஐக்கிய நாடுகளின் SDGகளுடன் ஒத்துப்போகிறது, இது போன்ற முக்கிய உலகளாவிய சவால்களை எதிர்கொள்கிறது

- பாலின சமத்துவம்: சாரணர் திட்டங்களில் பாலின ஏற்றத்தாழ்வுகள் இன்றி பாலின வன்முறையற்ற சமூகத்தினையும் சமமான பங்கேற்பை ஊக்குவித்தல்.
- காலநிலை நடவடிக்கை: மரம் நடும் பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு முயற்சிகள் மூலம்.
- தரமான கல்வி: இளைஞர்களுக்கு அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை வழங்குதல்.
- அமைதி மற்றும் நீதி: மதங்களுக்கு இடையேயான மற்றும் கலாச்சாரங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

### உலக சிந்தனை தினத்துடன் தொடர்பு

சுவாரஸ்யமாக, பிப்ரவரி 22 உலகெங்கிலும் உள்ள பெண் வழிகாட்டிகள் மற்றும் பெண் சாரணர்களால் உலக சிந்தனை தினமாகவும் கொண்டாடப்படுகிறது . இந்த நாள் ராபர்ட் பேடன்-பவலின் மனைவியும் முதல் உலக தலைமை வழிகாட்டியுமான ஓலாவ் பேடன்-பவலின் பிறந்த நாளைக் குறிக்கிறது.

உலக சிந்தனை தினம் சர்வதேச நட்பு, சிறுமிகளுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ஸ்தாபகர் தினம் மற்றும் சிந்தனை நாள் இரண்டும் உலகில் சாரணர் மற்றும் வழிகாட்டுதலின் நேர்மறையான செல்வாக்கை நினைவூட்டுகின்றன.

உலக சாரணர் ஸ்தாபகர் தினம் என்பது ராபர்ட் பேடன்-பவல் பிரபுவின் மரபை கௌரவிக்கும் மற்றும் சாரணரின் நேர்மறையான தாக்கத்தை கொண்டாடும் ஒரு குறிப்பிடத்தக்க சந்தர்ப்பமாகும். உலகெங்கிலும் உள்ள சாரணர்கள் சேவை, தலைமைத்துவம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டிய நாள் இதுவாகும்.

சாரணர்கள் தொடர்ந்து உருவாகி வருவதால், இளைஞர்களை பொறுப்பான, ஈடுபாடு மற்றும் இரக்க முள்ள குடிமக்களாக தயார்படுத்துவதன் மூலம் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்கும் அதன் நோக்கத்திற்கு இது அர்ப்பணித்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பேடன்-பவல் நிறுவிய கொள்கைகள் மில்லியன் கணக்கான மக்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கின்றன, "ஒரு முறை சாரணர், எப்போதும் ஒரு சாரணர்!" - “Once a Scout, always a Scout!” என்பதை நிரூபிக்கிறது.

இந்த சிறப்பு நாளில், சாரணர்கள் உலகளாவிய குறிக்கோளின் கீழ் ஒன்றிணைகிறார்கள்: "தயாராக இருங்கள்" “Be Prepared” - இது வாழ்க்கையின் சவால்களை தைரியத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருக்க நமக்கு நினைவூட்டும் காலமற்ற செய்தியாகும்.

**நாகராசா தனுஸ்காந்**
**(ஜனாதிபதி சாரணன்),**
**ஊடகக்கற்கைகள் துறை,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





# புதைகுழிகளை மறைக்கும் முகமாகவே தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா?

## அருட்தந்தை மா.சத்திவேல் சந்தேகத்துடன் கேள்வி

(பா.சதீசன்)

சமூகப் புதைகுழியை மறைக்கும் முகமாக தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா எனச் சந்தேகம் இருப்பதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் நேற்றுத் தாம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

படையினரை பொறுத்தவரையில் தமிழர் பிரதேசத்தில் நாட்டின் சட்டங்கள் எல்லாம் அவர்களின் இரும்பு சப்பாத்தின் கீழ் என்பதற்கு இன்னொரு அடையாளமே அவர்களால் தையிட்டியில் தனியார் காணியில் கட்டப்பட்ட திஸ்ஸ விகாரையாகும். இவ்வநீதிக்கு எதிராக ஜனநாயக உரிமையோடு போராடுவோர்க்கு எதிராக பொலிஸாரும் செயற்பட்டு போராட்டம் தொடராதிருக்க அடையாளம் காணப்பட்டோரை விசாரணைக்கென அழைப்பதையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அநீதிக்கு எதிரான ஆட்சியாளர்கள் எனத்தம்மைத்தம்பட்டம்அடிக்கும்தேசிய மக்கள் சக்தி தலையிட்டு நீதியை நிலைநாட்டாதவிடத்து அது தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியாக அமைவதோடு அதுவே இனங்களுக்கிடையில் அமைதியின்மை இன,மத விரிசல் என்பன ஏற்படுவதற்கும் வழிவகுக்கும். அது மட்டுமல்ல தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த தமிழ் தேச மக்களை அவமானப்படுத்துவதாகவும் அது அமையும் எனவும் கூறுகின்றோம்.

வரலாற்றில் மன்னர் ஆட்சி காலத்தில் நாட்டில் செல்வம் பெருகி அமைதி நிலவிய போது அரசர்ஜ தமது கௌரவத்திற்காகவும், புகழுக்காகவும் வானுயரக் கோபுரங்களோடு வழிபாட்டிடங்களை அமைத்ததார்கள், அதன் மூலம் பக்தி வளர்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் இலங்கையில் - விசேடமாக 1948 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலகட்டத்தில் - சிங்கள பௌத்த பேரினவாதத்தைப் பாதுகாக்கவும், அதன்மூலம் அரசியல் செய்யவும், ஆட்சியைஜ் கைப்பற்றவும் மட்டுமேல்ல, தமிழர் தேசத்தில் நிலங்களை ஆக்கிரமிக்கவும் ஆட்சியாளர் விகாரைகளை கட்டியதே வரலாறு. அதேபோன்று தமிழர் தேசத்தில் பல நூறு விகாரைகளை கட்டுவோம் என சூளுரைத்த சிங்கள, பௌத்த அரசியல்வாதிகளையும் கொண்டதே நாட்டின் அரசியல்.

யுத்த காலத்தில் படையினர் பொது மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து துரத்திவிட்டு, அவர்களுக்குச் சொந்தமான காணிகளை இல்லாமல் ஆக்கிரமித்து, பாரிய படைத்தளங்களை அமைத்தனர். புத்தரின் தர்ம போதனைகள் எல்லாம் தூக்கி எறிந்தவர்கள், தமது வழிபாட்டுக்கென படைத்தளங்களில் வழிபாட்டுத் தலங்களையும் அமைத்துக் கொண்டனர்.

இந்த வகையில் தற்போது சர்ச்சைக்கு உள்ளாகி உள்ள தையிட்டி விகாரை பல கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்புகின்றது. விகாரைக்கென்று காணி இருக்கும் போது தனியார் காணியை தேர்ந்தெடுத்து அதன் உரிமையாளர்களின் அனுமதியின்றி விகாரை கட்டியது ஏன்? தொற்று நோய் காரணமாக முழு நாடும் முடக்கப்பட்டிருந்த போது அவசர அவசரமாக விகாரை எழுப்பியது ஏன்? நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும் போதும் படையினர் யாரின் அனுமதியோடு இவ் விகாரையை அமைத்தனர்? அதற்கான பணம் எங்கிருந்து வந்தது? இதற்குப் பின்னணியில் இருந்தவர்கள் யார்? - என்ற கேள்விகளோடு இந்த விகாரையை அமைக்கப்பட்டதன் பின்னால் ஏதோ மர்மம் உள்ளதாகவே தோன்றுகின்றது. இதற்கு அடிப்படை காரணம் தனியார் காணியில் விகாரை அமைத்தமையாகும்.

கொழும்பு துறைமுகப் பகுதியில் - அதுவும் அதி பாதுகாப்பு பிரதேசத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அண்மையில் செம்மணியில் மின்சாரத் தகன மேடை அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்ட போது மனித எச்சங்கள் வெளி வந்தன எனக் கூறப்படுகின்றது. இவற்றைத் தவிர நாட்டின் தமிழர் பிரதேசம் உட்பட பல பகுதிகளில் சமூக புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை தொடர்பான விசாரணை முழுமை பெற்றதாக இல்லை. காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடுவோர் சமூக புதைகுழிகளுக்கு முன்னால் நின்று கண்ணீர் விடுகின்றனர். நீதி கேட்டு வீதியில் நிற்கின்றனர். அவர்களுக்கு இன்று வரை நீதி கிட்டவில்லை. இந்த நிலையில் அவ்வாறான ஒரு சமூக புதைகுழியினை மறைக்கும் முகமாக இவ் விகாரை கட்டப்பட்டுள்ளதா என மக்கள் சந்தேகம் கொள்வதிலும் நியாயம் இருக்கின்றது.

தையிட்டி விகாரை என்பது நில ஆக்கிரமிப்பு, யுத்த வெற்றி, பௌத்த மயமாக்கல் அடையாளங்களுக்கு அப்பாலும் சிந்திக்க வைக்கிறது. ஏனெனில் உண்மையில் பௌத்தத்தை காக்க வேண்டும் எனில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடத்திலேயே விகாரை கட்டப்பட்டிருக்க வேண்டும். அதனை தவிர்த்து விட்டு வேறு ஓர் இடத்தை தேர்ந்தெடுத்தது ஏன்? அதுவும் அவசர

தொடர்ச்சி ▼

# புதைகுழிகளை மறைக்கும் முகமாகவே தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா?

தொடர்ச்சி▲

அவசரமாக விகாரை கட்டப்பட்டுள்ளது. அதுவே விகாரைக்கு பின்னால் ஏதோ மர்மம் உள்ளது, அதனை மறைக்கவே படையினர் திட்டமிட்டு செயற்பட்டுள்ளனர் என மக்கள் சிந்திக்கின்றனர். மர்ம முடிச்சை அவிழ்க்க வேண்டியதும் மக்களின் சந்தேகத்தை தீர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

யுத்த காலத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. உயிருக்குப் பயந்து அபயம் தேடி அங்கு வந்திருந்த மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர். மக்கள் வாய் திறக்கவில்லை. ஏனெனில் அடக்குமுறை கொலை ஆயுதம் அவர்களுக்கு நேராக நீட்டிக் கொண்டிருந்ததோடு தலைக்கு நேராகவும் தொங்கிக் கொண்டிருந்தது. தம்புள்ளையில் இந்து ஆலயமொன்று அனுமதியின்றி கட்டப்பட்டதாக இடித்து அழிக்கப்பட்ட போது மக்கள் பொறுமை காத்தனர். ஆனால் திஸ்ஸ விகாரை என்பது சிங்கள – பௌத்த பேரினவாதம் தம் தலையில் காலை வைத்து விதைத்திருப்பதன் அடையாளமாகவே மக்கள் உணர்கின்றனர். அதனால் மக்கள் தம் அறக்கோபத்தையே வெளிப்படுத்துகின்றார்.இதனை ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வெறுமனே பிழையான இடத்தில் விகாரை கட்டப்பட்டுள்ளது என்று கூறுவது மட்டும் பிரச்சனைக்கு தீர்வு அல்ல. மக்களுடைய சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டும். நீதி நிலை நாட்டப்பட வேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு காவலாக இருப்போம் என்பதை ஆட்சியாளர் உறுதிபடுத்தலும் வேண்டும்.

கடந்த கால ஆட்சியாளருக்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்ன செய்ய முடியும்?என கேள்வி கேட்போர் ஒன்றை மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.தேசிய மக்கள் சக்தியினர் கடந்த கால தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டி அதற்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள், தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியதை மறந்துவிட முடியாது. தற்போது அவர்களைத் தேடி தேடி வலை வீசி நீதிமன்றம் கொண்டு வர முயற்சிப்பதை நம் காணுகின்றோம். பலர் மீது வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. எனவே திஸ்ஸ விகாரை விடயத்திலும் அநீதி நிகழ்ந்துள்ளது. இங்கும் நீதி நிலை நாட்டப்படுவதோடு குற்றவாளிகள் நீதிமன்றிற்குக் கொண்டுவர வேண்டும்.

இங்கு விகாரை பிரச்சினை என்பது சமயம் சார்ந்த – பக்தி சார்ந்த – பிரச்சினை அல்ல. இது தமிழ் மக்களின் அரசியலோடு தொடர்புடையது. அதனாலேயே போலி சிங்கள தேசியவாதிகளும் சிங்கள, பௌத்த அரசியல்வாதிகளும் கூக்குரல் இடுகின்றனர்.தமிழர்களின் அரசியல் வீழ்த்தப்பட்டதன் அடையாளமாகவே விகாரை அமைந்துள்ளது. இதனை ஏற்க முடியாது.

எனவே சமூக புதைகுழி விகாரைக்குள் இருக்கலாமோ என்கின்ற சாதாரண சந்தேகத்தினை தீர்க்க வேண்டியது ஆட்சியாளரின் கடமை. அதேபோன்று நீதியை நிலைநாட்ட வேண்டியதும் அவர்களின் பொறுப்பாகும். இதற்கான அழுத்தத்தினை தமிழ் தேசத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் – அரசாங்கக் கட்சியினர் உட்பட அனைவரும் – ஒன்றிணைந்து குரல் எழுப்புதல் வேண்டும். மக்களோடு பயணிக்க வேண்டும். இதுவே இன்றைய தேவை.அதுவே மக்களுக்கான அரசியல் கௌரவமாகவும் நீதிக்கான பயணமாகவும் அமையும். – என்று உள்ளது.

# யாழ். ஊடகவியலாளர்கள் இரண்டு பேரிடம் பலாலிப் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர்

“தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்!” என முகநூலில் பகிரப்பட்ட பதிவு தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் பலாலி பொலிஸார் சுமார் ஆறு மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

“தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்!” என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரில் போலி முகநூல்களில் பதிவுகள் பகிரப்பட்டன. அந்தப் பதிவுகள் பகிரப்பட்டு சில மணி நேரங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்தொ பதிவு போலியானது என தனது சமூக ஊடகங்களில் பதிவிட்டமையுடன், ஊடக சந்திப்பொன்றினையும் நடத்தி அது போலியான விளம்பரங்கள் என அறிவித்திருந்தார்.

அந்நிலையில் கடந்த வாரம், இந்த விளம்பரப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பலாலி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் யாழ். பிராந்திய ஊடகவியலாளர்களான கந்தசாமி பரதன், தம்பித்துரை பிரதீபன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்களிடம் வாக்கு



மூலம் பெறுவதற்காக பலாலி பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பிரிவுக்கு அழைத்த பொலிஸார், ஊடகவியலாளர்களை அங்கிருந்து உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரண்டு ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளைப் பெற்று சோதனையிட்டமையுடன், அவர்களிடம் சுமார் 06 மணி நேரம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டனர். பின்னர் இந்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் தாம் அழைக்கும் போது நீதிமன்றுக்கு சமுகமளிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் இருவரையும் பொலிஸார் விடுவித்துள்ளனர்.

அதேவேளை தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த, முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வாசுகி சுதாகரன் உள்ளிட்டோரை பலாலி பொலிஸார் வாக்கு மூலம் வழங்க என நேற்று முன்தினம் வியாழக்கிழமை பலாலி பொலிஸ் நிலையத்தின் உப பிரிவுக்கு அழைத்து சுமார் 02 மணி நேரம் காத்திருக்க வைத்த பின்னரே வாக்கு மூலங்களை பெற்று இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# லஞ்சமாக மதுபானசாலை அனுமதிகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் எங்கே?

## அதை மறைக்க நீங்களும் லஞ்சம் வாங்கி வீட்டீர்களா என சாணக்கியன் கேள்வி

இலஞ்சமாக மதுபானசாலை அனுமதிகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளியிடுவது அரசாங்கத்தின் பொறுப்பு. இல்லையென்றால், இவர்களுக்கு (இந்த அரசுக்கு) அந்த அரசியல்வாதிகள் இலஞ்சம் வழங்கி உள்ளார்களா என்றே எண்ணத் தோன்றுகிறது.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அரசைக் கடுமையாகச் சாடினார். அங்கு அவர் கூறியவை வருமாறு:–

கடந்த அரசாங்க காலபப்குதியில் இலஞ்சமாக மதுபானசாலை அனுபதிப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன என்று தற்போதைய ஜனாதிபதி மேடைகளில் குறிப்பிட்டிருந்தார். மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை அதற்கு முன்னதாகவே எமக்கு தெரியும். ஏனென்றால், மதுபானசாலை அனுமதிபத்திரம் வேண்டுமா என எம்மிடமும் கேட்டார்கள். நாங்கள் எடுக்கவில்லை. ஆனால் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டதாக ஜனாதிபதி மேடைகளில் எல்லாம் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கின் சுற்றாலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்த மதுபானசாலை அனுமதி வழங்கப்பட்டதாக அப்போதைய அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. மட்டக்களப்பில் உள்ள ஒரே வெள்ளைக்காரன், வெள்ளை தோல் உள்ளவன் நான்தான் என்றே நான் எப்போதும் குறிப்பிடுவேன். ஏனென்றால் அங்கு வெள்ளைக்காரன் வருவதில்லை. உரிய போக்குவரத்து வசதி இல்லை. அவ்வாறு சுற்றுலாப் பயணிகள் இல்லாத ஒரு பகுதியில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு மதுபானசாலை அனுமதி மாத்திரம் வழங்கிப் பயனில்லை. ஆனால் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யவே இவை மேற்கொள்ளப்பட்டன என அப்போது கூறப்பட்டது. சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல அபிவிருத்தி செயற்பாடுகள் காணப்பட்ட நிலையில் இந்த மதுபானசாலை அனுமதி வழங்கப்பட்டமை குறித்து நாம் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வந்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான எட்டு மதுபானசாலைகள் வரவிருந்த நிலையில் நாம் வீதிகள் தோறும் என்று போராட்டங்களை மேற்கொண்டோம். அந்தப் பிரதேச செயலாளர்களின் தலையீட்டினால் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஒரு மதுபானசாலை மாத்திரமே திறக்கப்பட்டது. அதுவும் "ரெஸ்டுரன்ட்" ஒன்று. அதைவிட மட்டக்களப்பில் எதையும் திறக்கவிடவில்லை.

இவ்வாறான நிலையில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அம்பாறை பெரியநீலாவணைப் பிரதேசத்தில் மதுபானசாலை ஒன்றைப் புதிதாக திறப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதிபத்திரம் முன்னைய அரசாங்கத்திலா அல்லது தற்போதா வழங்கப்பட்டது என எனக்குத் தெரியாது. அனுமதிப்பத்திரம் முன்னைய அரசாங்கத்தில் வழங்கப்பட்டிருக்கலாம். அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டதாக இருக்கும் என்றே நான் எண்ணுகின்றேன்.

இந்த மதுபாசாலை திறக்கப்படவுள்ளது. அதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. இதற்கு எதிராக கடந்த வாரம் பாரிய மக்கள் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த அரசாங்கக் காலப்பகுதியில் பெருந்தொகை மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வினால் பெயர் பட்டியல் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டது. கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி நளிந்த ஜயதிஸ்ஸ பட்டியலொன்றை வெளியிட்டார். இந்த பட்டியலில் மதுபானசாலை உள்ள இடமும் பெயரும் முகவரியுமே காணப்படுகின்றன. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரினால் முகவரியை நாமும் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பட்டியக் அரசாங்கத்தின் தலையீட்டின் கீழ் வழங்கப்பட வேண்டிய எவ்வித அவசியமும் இல்லை.

ஆனால், அரசியல் இலஞ்சமாகவே இந்த மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன என ஜனாதிபதி குறிப்பிட்டார். இது யாரால் வழங்கப்பட்டது? யார் பெற்றுக் கொண்டனர்? அதனை பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடுவீர்களா? அதன்போது இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாக குறிப்பிட்டனர். அவ்வாறாயின் யார் இந்த விசாரணையை மேற்கொள்வது என்று

தொடர்ச்சி▼

# லஞ்சமாக மதுபானசாலை அனுமதிகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் எங்கே?

தொடர்ச்சி▲

நான் அப்போதே கேள்வி எழுப்பினேன். சி.ஐ.டியினரா? பொலிஸாரா? அல்லது இலஞ்ச ஊழல் துறையினரா? ஜனாதிபதி செயலகமா? யார் விசாரணை மேற்கொள்வது? ஆனால், இதுவரை அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை. இந்த மதுபானசாலை அனுமதிப் பத்திரம் பெற்ற அரசியல்வாதிகளின் பெயர்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட இவ்வாறான மதுபானசாலை அனுமதிகளை இரத்து செய்வதற்கோ அல்லது இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கோ அரசாங்கத்தினால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது.

"இந்த அனுமதிகள் சட்டரீதியாகவே வழங்கப்பட்டுள்ளன, எனவே எமக்கு எதுவும் செய்ய முடியாது" என அமைச்சர் ஒருவர் கூறுகிறார்.

ஆனால் பிரசார மேடைகளில் கூறப்பட்டது அதுவல்ல. இலஞ்சமாக வழங்கப்பட்டு இருப்பின் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஊடாக இதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், கிளிநொச்சி மாவட்டத்தில் 5,000 வாக்காளர்களுக்கு ஒரு மதுபானசாலை காணப்படுகிறது. அமைச்சர் சந்திரசேகரனும் இதனை ஏற்றுக் கொள்வார் என்று நான் நினைக்கின்றேன். கிளிநொச்சி மக்களுக்கு அபிவிருத்தி என்று ஒன்றை காட்டியதே இல்லை. இவ்வாறான நிலையில் மதுபானசாலைகளின் அதிகரிப்பு காரணமாக மக்கள் மதுபோதைக்கு அடிமையாகும் அளவு அதிகரிப்பதால் அவர்களது பொருளாதாரத்திற்கு பாரிய அச்சுறுத்தல் நிலவுகிறது. அதனால் அது தொடர்பில் கௌரவ சபை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன், தேர்தலின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அம்பாறை பெரிய நீலாவணையில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் மதுபானசாலையை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருகிறேன். இதேவேளை ஏனைய மதுபானசாலைகளை மூடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இது மக்களுக்கு பாரிய பிரச்சினையாகும்.

ஜனாதிபதி கடந்த செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி ஆட்சிக்கு வந்த பின்னர் ஒக்டோபர் மாதம் 5ஆம் வரை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைத்த சகல கடிதங்களும் மதுவரித் திணைக்களத்திலேயே காணப்பட்டன. இதனை நேரில் கண்டவர்கள் உள்ளனர். இந்த நாடாளுமன்ற உறுப்பினர் இந்த பரிந்துரையை மேற்கொண்டார் என்பதை நேரில் கண்டவர்கள் இருந்தனர். அதற்கான புகைப்படங்களை எமக்கு ஆதாரங்களாக எமக்கு வெளியிட முடியாது. ஆனால் நாம் கண்கூடாகக் கண்டோம். ஜனாதிபதிக்கான கடிதத்தில் இந்த நாடாளுமன்ற உறுப்பினரின் இந்த பரிந்துரையை செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. இது மதுவரித் திணைக்களத்தில் காணப்பட்டது.

இவை ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டன. "மதுபானசாலை அனுமதிகள் இலஞ்சமாக வழங்கப்பட்டன. நாம் அவற்றை மூடுவோம். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இதனை நிறுத்துவோம். அதனை கண்டறிவோம்" – என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் தற்போது மதுபானசாலை அனுமதி எங்கெங்கு வழங்கப்பட்டுள்ளன என்ற பட்டியல் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். இல்லையென்றால், இவர்களுக்கு (இந்த அரசுக்கு) அரசியல்வாதிகள் இலஞ்சம் வழங்கி உள்ளார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த மதுபானசாலை அனுமதி பெற்றவர்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஏனெனில் அதுவொரு இலஞ்சம்.

வீடுகளுக்கு தீ வைத்தமை தொடர்பில் நஷ்டஈடு பெற்றவர்களின் பட்டியல் அண்மையில் வெளிப்படுத்தப்பட்டது. அந்த பட்டியல் மாத்திரம் போதாது. அவர்கள் அந்தப் பணத்தைத் தவறாகப் பெற்றிருப்பின் அந்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள். ஜனாதிபதி நிதியத்தில் நிதி பெற்றவர்களின் பட்டியலையும் வெளியிட்டனர். அவ்வாறு வழங்கிய பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இதேவேளை, அம்பாறை பெரியநீலாவணையில் அமைக்கப்பட்டுவரும் மதுபானசாலையை திறக்க ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம். அத்துடன், இலஞ்சமாக மதுபானசாலை அனுமதிகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளியிடுவது அரசாங்கத்தின் பொறுப்பு. அதனை இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்று நாம் நம்புகின்றோம். அதேவேளை மக்களின் நம்பிக்கையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கு தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் கோரிக்கை விடுக்கிறேன். – என்றார்.

# யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் சாமியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பு

இலங்கை தொழிலதிபரும் பெருமைக்குரிய "தினக்குரல்" நாளிதழின் நிறுவுநருமான எஸ். பி. சாமியின் மறைவுக்கு இந்திய துணைத் தூதரகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.




தமிழ்ப் பத்திரிகைத்துறையிலும் தொழில்துறையிலும் அவர் ஆற்றிய தொண்டுகள் சிறந்த முன்னோடியாக தலைமுறைகளை ஊக்குவிக்கும். இந்தக் கடினமான தருணத்தில், அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், "தினக்குரல்" குழுவிற்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். – என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறைந்த பிரமுகர் சாமி தம் வாழ்க்கையில் எப்பொழுதும் சமநிலையைப் பேணியவர்

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்





எந்த நிலைமையிலும், நாளாந்த வாழ்க்கையில், சாதாரண பொது மக்களில் இருந்து அந்நியப்பட்டு விடாமல், அரசியல் பிரமுகர்களோடும் ஊடகவியலாளர்களோடும், வர்த்தக சமூகத்தவர்களோடும் எந்தவிதமான பாரபட்சமுமின்றி சமநிலையைப் பேணிய பெருந்தகையாகதான் மறைந்த எஸ். பி .சாமி ஐயாவைத் தாம் மதிக்கின்றார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அன்னாரின் மறைவையிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அயராத முயற்சியின் பயனாக, தலைநகரில் வர்த்தக துறையில் தடம் பதித்த மறைந்த எஸ்.பி சாமி, தான் ஆரம்பித்த 'தினக்குரல' பத்திரிகை வாயிலாக ஊடகத் துறையிலும் அதிக கரிசனை காட்டிவந்தமையோடு, யாழ்ப்பாணத்தில் நவீன மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கும் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார்.

சமய நம்பிக்கையில் ஊறித் திளைத்திருந்த அவர், ஏனையவற்றிற்கு அப்பால், தமிழ் செய்தி ஊடகத்தை பெரிதும் நேசித்து வந்தமையை நன்றாக அறிந்துள்ளேன். தொழிலதிபராகப் பிரகாசித்தபோதும், ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் அநாவசியமாகத் தலையிடுவதைத் தவிர்த்து வந்திருப்பது அவரில் காணப்பட்ட சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

அரசியல்வாதிகளோடு – அதிலும் குறிப்பாக சிறுபான்மை அரசியல்வாதிகளோடு – அவர் மனம் விட்டுப் பழகினார். அவசியமான சந்தர்ப்பங்களில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதிலும் ஆர்வமாக இருந்தார். எப்பொழுதும் புன்னகைத்த முகத்துடன், வரவேற்று உபசரிக்கும் தன்மை வாய்ந்தவராகவும் அவர் விளங்கினார்.

தனது குடும்பத்தினர் கல்வியிலும், தொழில்துறைகளிலும் சிறந்து விளங்கி, சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதிலும் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

அன்னாரது மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அவரால் ஊடகத்துறையிலும், வர்த்தகத் துறையிலும் வழிகாட்டப்பட்டவர்களுக்கும் தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என்று உள்ளது.

# சிறந்த சமூக சேவையாளரை இழந்துள்ளது தமிழ்ச் சமூகம் சாமியின் மறைவுக்கு நீதியரசர் விக்னேஸ்வரனின் இரங்கல்



பிரபல தொழிலதிபர் எஸ்.பி.சாமியின் மறைவு தமிழ்ச் சமூகத்திடம் இருந்து ஒரு சிறந்த சமூக சேவையாளரை அபகரித்துச் சென்றுவிட்டது என்று 'தினக்குரல்' பத்திரிகை நிறுவனத்தின் தாபகரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனது நீண்டகால நெருங்கிய நண்பரான எஸ்.பி.சாமி வர்த்தகத்துறையில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து பல நிறுவனங்களை ஆரம்பித்து வெற்றிகரமான தொழிலதிபராக விளங்கியவர். அச்சுத்துறை தொடங்கி சினிமா தயாரிப்பு வரை அவர் தனது திறமையைக் காண்பித்து சாதனை படைத்தவர். தனது கடைசிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அவர் நிறுவிய வைத்தியசாலை இன்று வடக்கில் மிகப் பெரிய தனியார் மருத்துவ நிறுவனமாக விளங்குகிறது. எவ்வளவு உயரப் பறந்தாலும் அவரின் கால்கள் நிலத்திலேயே வேரூன்றி இருந்தன. அன்பும், பண்பும், பணிவும் அவரின் இயல்பான குணங்களாக மிளிர்ந்தன.

நண்பர் எஸ்.பி.சாமி வர்த்தகத் துறையில் மாத்திரமல்ல, சமூக, சமய சேவைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். தலைநகர் கொழும்பிலும் வடக்கிலும் பல்வேறு சமூக அமைப்புக்களில் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய அவர் தனது செல்வத்தை நலிவுற்ற மக்களின் நலன்களுக்காக தாராளமாகத் தந்து உதவினார்.

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் எஸ்.பி.சாமி ஆரம்பித்த 'தினக்குரல்' பத்திரிகை இன்று இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக விளங்குகின்றது. தலைநகரில் மாத்திரமல்ல, தினக்குரலின் பிராந்திய பதிப்பாக யாழ்ப்பாணத்திலும் பத்திரிகையைத் தனியாக வெளியிட்டு குடாநாட்டை வெளியுலகத்திற்கும் வெளியுலகை குடாநாட்டுக்கும் காண்பிக்கும் அரிய சேவையையும் சாமி அவர்கள் செய்தார்.

அவர் முழுமையான வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து சென்றிருக்கின்றார். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். – என்று நீதியரசர் விக்னேஸ்வரன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

# அசாமில் நிலக்கரி சுரங்க விபத்து; மேலும் 5 பேரின் உடல்கள் மீட்பு



அசாமில் நிலக்கரி சுரங்கத்தில் 9 தொழிலாளர்கள் சிக்கிய சம்பவத்தில் எஞ்சிய 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

அசாமின் திமா ஹசாவோ மாவட்டத்தில் உள்ள நிலக்கரி சுரங்கம் ஒன்றில் கடந்த ஜனவரி 6 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் 9 தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர்.

இவர்களில் ஜனவரி 8 ஆம் திகதி ஒருவரின் உடலும் 11 ஆம் திகதி 3 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன. இதையடுத்து சுரங்கத்தில் இருந்து தண்ணீரை வெளியேற்றும் பணி நடைபெற்றது. இப்பணி கடந்த புதன் கிழமை முடிவுக்கு வந்து மீட்புப் பணி மீண்டும் தொடங்கியது. இதில் எஞ்சிய 5 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன.

உடல்கள் சிதைந்த நிலையில் இருப்பதால் அவற்றை அடையாளம் காணும் பணி தொடங்கியுள்ளது. சுரங்க விபத்தில் இறந்த 9 பேரின் குடும்பத்தினருக்கும் மாநில அரசு 10 லட்சம் ரூபா இழப்பீடு அறிவித்துள்ளது.

# முதலாளிகளை ஊக்குவிக்கும் நரேந்திர மோடியின் அரசு

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



நாட்டில் பணவீக்கம் அதிகரித்து வருவதை பற்றி கவலைப்படாமல் மோடி அரசு முதலாளிகளை மட்டும் ஊக்குவித்து வருவதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

உத்த பிரதேச மாநிலம் ரேபரலி தொகுதியின் எம்.பியான ராகுல் காந்தி அங்கு இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். முதலில் சுருவா எல்லையில் உள்ள ஹனுமன் கோயிலுக்கு சென்ற அவர் சிறிது நேரம் சாமி தரிசனம் செய்தார். அதன்பிறகு பச்ரவன் சென்ற அவர் அங்கு காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில்,

“காங்கிரஸ் கட்சியினர் வாக்குச் சாவடி மட்டத்தில் தங்களது பலத்தை அதிகரிக்க வேண்டும். நாட்டில் பணவீக்கம் என்பது கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

இதனால் பொதுமக்கள் பெரிதும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். ஆனால், அவற்றையெல்லாம் பற்றி கவலைப்படாமல் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு முதலாளிகளுக்கு சேவை செய்வதிலும், அவர்களை ஊக்குவிப்பதிலும் மட்டுமே அக்கறை காட்டி வருகிறது. உண்மையில், பா.ஜ.கவும், மத்திய அரசும் உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களை திசை திருப்பி வருகின்றன.” – என்றார்.

# மகாராஷ்டிர மாநில துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுக்கு கொலை மிரட்டல்



மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவை வெடிகுண்டு வைத்து கொல்லப்போவதாக நேற்று முன்தினம் மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதுகுறித்து மும்பையில் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவின் காரை வெடிகுண்டு வைத்து தகர்க்கப் போவதாகவும் இதன்மூலம் அவரை கொல்லப் போவதாகவும் மிரட்டல் வந்துள்ளது.

இது தொடர்பாக கோரேகான், ஜே.ஜே. மார்க் பொலிஸ் நிலையங்களுக்கும் மாநில அரசின் தலைமையகமான மந்திராலயாவில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கும் காலையில் அழைப்புகள் வந்தன. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

# 200 சீன மோசடி சந்தேக நபர்கள் மியன்மாரிலிருந்து நாடு திரும்பினர்




மியன்மாரில் இருந்து மோசடி குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 200 சீன பிரஜைகளின் முதல் குழுவை திருப்பி அனுப்பும் பட்டய விமானம் தாய்லாந்து வழியாக கிழக்கு சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள நான்ஜிங்கில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் தரையிறங்கியது.

சீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தின்படி, தொலைத்தொடர்பு - இணைய மோசடிகளைத் தடுக்க சீனா, தாய்லாந்து மற்றும் மியன்மார் இடையேயான சர்வதேச சட்ட அமுலாக்க முயற்சிகளில் இது ஒரு மைல்கல் மற்றும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

தாய்லாந்து - மியன்மார் எல்லைப் பகுதியில் மோசடி குற்றங்களில் ஈடுபட்ட 800 இற்கும் மேற்பட்ட சீன சந்தேக நபர்கள் அடுத்த மூன்று நாள்களுக்குள் வாடகை விமானங்களில் ஜியாங்சு மாகாணத்திற்குத் திருப்பி அனுப்பப் படுவார்கள் என்று சீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் தகவலை மேற்கோள்காட்டி குளோபல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஹொங்கொங்கில் எதிர்க்கட்சியை கலைப்பது தொடர்பில் வாக்கெடுப்பு



ஹொங்கொங்கின் மிகப் பெரிய எதிர்க்கட்சியாக இருந்த ஜனநாயக கட்சியை கலைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

31ஆண்டு கால வரலாற்றை கொண்ட ஜனநாயக கட்சியை கலைப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என அந்த கட்சியின் தலைவர் லோ கின்-ஹெய் தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற போராட்டங்களை தொடர்ந்து சீனா மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஜனநாயக கட்சியின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

அதேநேரம், 2021 ஆம் ஆண்டு ஹொங்கொங்கில் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றுக்கு அமைய, சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமானவர்கள் என கருதப்படும் தரப்பினர் மட்டுமே சட்டமன்ற உறுப்பினர்களாக வர முடியும் என்ற நிலை உருவானது.

அத்துடன் இந்த சட்டம் ஜனநாயக கட்சி தேர்தலில் போட்டியிடுவதையும் தடுத்தது.

இந்தநிலையிலேயே, இந்த கட்சியை கலைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

# 3,500 ஆண்டுகள் பழமையான கல்லறை தீப்ஸ் மலைப்பகுதியில் கண்டுபிடிப்பு







எகிப்தின் நைல் நதி அருகே உள்ள தீப்ஸ் மலைப்பகுதியில் 3500 ஆண்டுகள் பழமையான கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகின் பழமையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் ஒன்று.

எகிப்தின் நைல் நதி அருகே உள்ள தீப்ஸ் மலைப்பகுதியில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது.

அங்குப் பழமை வாய்ந்த கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனை ஆராய்ச்சி செய்தபோது கி.மு.15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் துட்மோஸ் என்ற மன்னரின் கல்லறையாக இருக்கலாம் எனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.02.2025




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது. மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி, இருமல் பாதிப்பு காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.02.2025




இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# ஹைட்ரோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி மின் உற்பத்தியை மேற்கொள்ள தீர்மானம்

நாட்டில் ஹைட்ரோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மகாஓயாவின் அரநாயக்க, நாவலப்பிட்டி பகுதிகளில் 2 நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டு 2.5 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப்பாதை ஊடாக இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பகலில் சூரிய சக்தி, காற்றாலை சக்தியைப் பயன்படுத்தி நீர்த்தேக்கத்திலிருந்து நீருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு இரவு நேரத்தில் நீர்த்தேக்கத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் ஊடாக மின்சாரத்தை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக 600 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்கு 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் எரிசக்தி உற்பத்தியில் இது ஒரு புதிய மைல்கல் எனவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் 70 சதவீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து உற்பத்தி செய்யும் அரசாங்கத்தின் இலக்கை அடைய இது உதவும் என மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.